11th December 1959]

Government College of Integrated Medicine

* 148 Q.—Sri V. K. RAMASWAMY MUDALIYAR:
Sri K. SATTANATHA KARAYALAR:
Sri A. VEDARATHNAM:
Sri K. VINAYAKAM:
Sri K. ANBAZHAGAN: } Will

the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) the reasons for the recent strike by the students of the Government College of Integrated Medicine; and

(b) the action taken by the Government thereon?

The Hon. Sri M. A. MANICKAVELU: (a) & (b) A statement[a] is placed on the table of the House.

* 149 Q.—Sri N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether the reorganisation of the courses in the College of Integrated Medicine has been given effect to; and

(b) if so, the details thereof?

The Hon. Sri M. A. MANICKAVELU: (a) & (b) Orders have been issued revising the syllabus with a view to give more time for the teaching of Indigenous Medicine subjects in the College.

Proposals for the upgrading of the Siddha Section of the College of Integrated Medicine are under consideration.

Sri K. ANBAZHAGAN: தலைவர் அவர்களே, ஜி.ஸி.ஐ.எம். கல்லூரியில் பயிற்சி பெற்று பட்டம் பெற்ற மாணவர்களை எம்.பி.பி.எஸ். படித்துப் பட்டம் பெற்ற மாணவர்களைப்போல, யூனிவர்சிடி அதிகாரிகள் கருத மறுத்தாலும்கூட, அரசாங்கம் அவர்கள் இரண்டு பேர்களுடைய தகுதியையும் ஒன்றாக ஏற்றுக் கொள்வதனால், வேலைகளில் அவர்களைப்போலவே இவர்களையும் நியமித்து, ஒரேவிதமான சம்பளம் கொடுப்பதற்கு முன் வருவார்களா?

The Hon. Sri M. A. MANICKAVELU: அப்படித்தான் கொடுத்துக்கொண்டு வருகிறோம். இவர்களை யுனிவர்ஸிடி அதிகாரிகள் எம்.பி.பி.எஸ். பட்டதாரிகளைப் போல அங்கீகரிக்க மறுத்துவிட்டார்கள். நாம் ஒன்றாக ஏற்றுக் கொள்வதால் ஆறு மாதத்திற்கு முன்னே கூட இந்த அடிப்படையில்தான் இவர்களை, சில உத்தியோகத்தில் அமர்த்திக்கொண்டிருக்கிறோம்.

Sri K. VINAYAKAM: Is it a fact that when the students belonging to this course represented to the Government about their grievances, the Government threatened them that they would close the institution if they did not withdraw the strike irrespective of the validity of their demands?

---

[a] Printed as Appendix VI on pages 555-556 and infra.

[11th December 1959

MR. SPEAKER : How does this arise out of the main question?

THE HON. SRI M. A. MANICKAVELU : The first threat came from the students and then we told them.

SRI A. VEDARATHNAM : அந்த மாணவர்களுடைய கோரிக்கைகள் எல்லாம் என்ன என்பதை தயவு செய்து அறிவிக்க முடியுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU : அந்த விவரங்களை எல்லாம் இங்கே கொடுத்திருக்கிறேன்.

DR. (SRIMATHI) T. S. SOUNDARAM RAMACHANDRAN : இந்த மெடிகல் ஆபிசர்களை அப் க்ரேட் செய்வதற்கு அந்தக் காலேஜையே புல்ப்ளெஜ்ட்டு மெடிகல் காலேஜாக மாற்றுவதற்கு ஏற்பாடு செய்வார்களா? அது இல்லாத காரணத்தினால்தான் இந்தப் பிரச்சனைகள் எல்லாம் எழுகின்றன என்பதும் அரசாங்கத்திற்குத் தெரியுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU : அந்த மாதிரியான பிரச்னை இப்போது உலாவிக்கொண்டிருக்கிறது.

SRI K. ANBAZHAGAN : ஜி.ஸி.ஐ.எம். காலேஜில் படிக்கிறவர்கள் எம்.பி.பி.எஸ். படிக்கிறவர்களைப்போல முழுப் படிப்பும் படிக்கவில்லை என்பது இவர்களை யுனிவர்சிடியார் அங்கீகாரம் செய்யாததற்கு காரணமாக இருக்கலாம், ஆனால் அரசாங்கத்தில் வேலைக்கு வருகிறபோது இவர்கள் எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்றவர்கள் என்ன சம்பளம் பெறுகிறார்களோ அதே சம்பளம் பெறும்படியாகச் செய்வதற்கு என்ன தடை இருக்கிறது?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்தப் பிரச்சனையில் இம்மாதிரி அநேக யோசனைகள் இருக்கின்றன. இதுவும் அதில் ஒரு யோசனை. இதுவும் பரிசோதனையில் இருக்கிறது.

SRI K. VINAYAKAM : Whereas this G.C.I.M. course has been recognised by the Government and not by the University, will the Government think of approaching the University authorities again and requesting them to lay down the basic qualifications and how to upgrade this G.C.I.M. course on a par with the M.B.B.S. course and then try again whether it could be recognised by them?

THE HON. SRI M. A. MANICKAVELU : காலேஜை ஆரம்பிப்பதற்கு முன்னாலேயே யுனிவர்ஸிடி ஒத்துக்கொள்ளவில்லை. தனிப்பட்ட நபராக இருந்தால் திரும்ப திரும்ப எழுதி சம்மதிக்க வைக்கலாம். ஒரு ஸ்தாபனம் ஒரு முறை ஒரு முடிவு எடுத்தால் பிறகு அதை மாற்றிக்கொள்வது என்பது கஷ்டம். ஆகவே அவர்கள் தங்கள் முடிவை மாற்றிக்கொள்வார்கள் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. ஆகவே இந்தப் பிரச்சனைக்கு அம்மையார் சொன்னார்களே அந்த வழியில் யோசனை பண்ணுவது நல்லது.

11th December 1959]

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : About a couple of years back—I think in 1957—we passed a legislation incorporating all these improvements and still the Government are not in a position to give effect to that Act. Now at least will they address the University authorities and see that something is done as early as possible?

THE HON. SRI M. A. MANICKAVELU : Yes, I will look into the matter.

MR. SPEAKER : It is now ten o'clock. I have this question and the next question No. 150. I hope the House will agree to 10 .m. take five more minutes and finish this question and the next question.

SRI T. T. DANIEL : May I know, Sir, whether there is any difference between the subjects that these students are taught and the subjects which the M.B.B.S. students are studying? If there is any such difference, will the Government make the necessary arrangements to give instruction to these students in those subjects also and consider these students as equivalent to the M.B.B.S. students?

THE HON. SRI M. A. MANICKAVELU : The difference is that these students study something about the indigenous systems of medicine also.

SRI S. LAZAR : இந்தக் கல்லூரி மாணவர்கள் அதிருப்தியடைந்திருக்கின்றனர் என்பதோடு மட்டுமல்ல, ஆயுர் வேதம், யுனானி போன்ற மருத்துவ முறைகளும் சரியாக மாணவர்களுக்கு கற்பிக்கப்படவில்லை என்று மற்றொரு புறம் புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. இவைகளை எல்லாம் தீர்ப்பதற்கு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்க முன் வருமா?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்தப் பிரச்னைகள் எல்லாம் இப்போது பரிசீலனையில் இருந்து வருகிறது.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, இந்த மாணவர்களின் வேண்டுகோளின்படி புதிய பஸ் வாங்குவதற்கு அனுமதித்ததாகவும், அவர்களுக்கு வேண்டிய கட்டிடங்களை கட்டிக்கொடுக்க சம்மதம் தெரிவித்ததாகவும், அம் மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்தபோது அரசாங்கம் தெரிவித்ததாகச் சொன்னார்கள். அதன்படி இதுவரையிலும் ஏதாவது கட்டிடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா? புதிய பஸ் வாங்கப்பட்டிருக்கிறதா? இதற்கான நடவடிக்கை எந்த அளவில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : கட்டிடங்கள் கட்ட வேண்டுமென்றால் பிளான் எல்லாம் போடப்பட்டுதான் கட்டப்படவேண்டும், சிறிய குடிசை வேண்டுமென்றால் சீக்கிரம் கட்டிவிடலாம். பஸ் வாங்குவதற்கும் பணத்திற்கு வழி கிடைத்தவுடன் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.